RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-361 | 28 டிசம்பர் | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# "மன்மோகன் சிங் மறைவு நாட்டுக்கே பேரிழப்பு" பிரதமர் மோடி புகழஞ்சலி
## காங்கிரஸ் கட்சியின் கார்கே, சோனியா, ராகுல் இறுதி அஞ்சலி

புதுடெல்லி, டிச.28

மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் உடலுக்கு பிரதமர் மோடி, நேரில் அஞ் சலி செலுத்தினார். பின்னர் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். மேலும், "மன்மோகன் சிங் மறைவு நாட்டுக்கே பேரிழப்பு" என பிரதமர் மோடி தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் மன் மோகன் சிங், மூச்சுத்திணறல் காரணமாக நேற்று இரவு டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவசர சிகிச்சை பிரிவில் அனு மதிக்கப்பட்டிருந்த அவர் சிகிச்சை பலனின்றி காலமா னார். இந்நிலையில், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் உடலுக்கு குடியரசுத் துணைத் தலைவர் ஜெக்தீப் தங்கர், பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா மற்றும் காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் வீடியோவில் பேசிய பிரதமர் மோடி, "முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின் மறைவு நம் அனைவ ரையும் மிகுந்த வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது. மன்மோகன் சிங் மறைவு நாட்டுக்கே பேரிழப்பு ஆகும். அவரது வாழ்க்கை வருங்கால சந்ததியினருக்கு முன்னுதாரணமாகும். நாம் எவ்வாறு போராட்டங்களை தாண்டி, உயர முடியும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

அவர் எப்போதும் ஒரு நேர்மை யான மனிதராக, சிறந்த பொருளாதார நிபுணராக நினைவுகூரப்படுவார். ஒரு பொருளாதார நிபுணராக, அவர் நாட்டுக்கு பல்வேறு சேவைகளை வழங்கினார். சவாலான நேரத்தில், ரிசர்வ் வங்கியின் ஆளுநராக பணியாற் றினார். பொருளாதார நெருக்கடி யில் சிக்கிக் கொண்டிருந்த நாட்டிற்கு பொருளாதாரத்தில் ஒரு புதிய திசையை உரு வாக்கிக் கொடுத்தார் என்று தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் மன் மோகன் சிங்கின் உடலுக்கு காங்கிரஸ் தலைவர் மல்லி கார்ஜுன கார்கே, காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

இதபோல், குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், பாஜக தேசிய தலைவரும் மத்திய அமைச் சருமான ஜெ.பி. நட்டா உள்ளிட்



டோர் மன்மோகன் சிங்கின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். மன்மோகன் சிங்கின் மனைவி உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

மன்மோகன் சிங்கின் உடலுக்கு அஞ்சலி செலுத்திய காங்கிரஸ் அமைப்பு பொதுச் செயலாளர் கே.சி. வேணு கோபால், "இது நாட்டிற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் மிகவும் சோகமான நாள். நாட்டின் சிறந்த அரசியல்வாதிகளில்; நிர்வாகிகளில் டாக்டர் மன் மோகன் சிங் ஒருவர். காங்கிரசை பொறுத்த வரையில், நாங்கள் தலைசிறந்த தலைவர் ஒருவரை இழந்துவிட்டோம். 10 ஆண் டுகள் பிரதமராகவும், 5 ஆண்டு கள் நிதியமைச்சராகவும் இருந்த போது அவர் நல்லாட்சியை வழங்கினார்" என தெரிவித்தார்.

காங்கிரஸ் எம்.பி மணிஷ் திவாரி, "சண்டிகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் நானும் அவரும் அண்டை வீட்டா ராக இருந்தோம். நான் பிறந்த நாள் முதல் அவருக்கு என்னைத் தெரியும். அவருடைய அரசில் மத்திய அமைச்சராகப் பணியாற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. 1991 பொரு ளாதார தாராளமயமாக்கல் மூலம் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு இந்தியப் பொருளாதாரத்திற்கான கதவுகளைத் திறந்தவர், சிறந்த அறிவுஜீவி, உறுதியானவர். நாம் அனைவரும் அவரிடமிருந்து தொடர்ந்து உத்வேகம் பெறு வோம்." என தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் எம்பி சசி தரூர், "மன்மோகன் சிங்கின் மறைவு மிகவும் வருத்தம் அளிக்கிறது. ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையில் நான் பணியாற்றிய காலத்தில், அவர் தெற்கு ஆணை யத்தின் தலைவராகப் பணியாற் றியதால், அவரை நான் பல



ஆண்டுகளாக அறிவேன். அவர் ஒரு அசாதாரண மனிதராக இருந்தார். பின்னர், அவர் பிரதம ரானதும், சோனியா காந்தியுடன் இணைந்து என்னை அரசிய லுக்கு கொண்டு வந்தார். அவர் நமது நாட்டின் பொருளா தாரத்தை நிலையாக வைத் திருந்தார். மன்மோகன் சிங் தலைமையில் உலகளவில் சவாலான காலங்களில் இந்தியா சிறப்பாக செயல்பட்டது. அவரு டைய வழிகாட்டுதலின் கீழ் நம் நாட்டில் எத்தனை நல்ல மாற்றங்கள் நிகழ்ந்தன என்பதை இது காட்டுகிறது. அவரது மனிதா பிமானமும் கருணையும் அசாதா ரணமானது. ஒரு பெரிய மனிதர் நம்மை விட்டு பிரிந்துவிட்டார்." என குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் எம்.பி ரந்தீப் சிங் சுர்ஜேவாலா, "பழம்பெரும் அரசியல்வாதியும், பொருளாதார வல்லுநரும், இந்தியா கண்டி ராத சாதுரியமான மனிதர் களுள் ஒருவருமான டாக்டர் மன் மோகன் சிங்கின் மறைவுடன் ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது. அவரது எளிமை, நன்னடத்தைக் கான தேடுதல் மற்றும் பொது வாழ்வில் பொறுப்புக்கூறல் ஆகியவை அனைவராலும் நினைவில் கொள்ளப்படும். எதேச்சதிகார மற்றும் பெரும் பாலும் நியாயமற்ற விமர்சனங் களை எதிர்கொண்டவர் அவர். எனினும், ஜனநாயகத்தின் ஒரு பகுதியாக அவர் விமர்ச னங்களை ஏற்றுக்கொண்டார். விமர்சனங்களை ஏற்க மறுக் கும் இன்றைய சூழலில் அவரது அணுகுமுறை கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது.

அவர் கூறியது போல், வரலாறு அவரை கனிவாக மதிப்பிடும். டாக்டர் மன் மோகன் சிங் தனது இறுதிப் பயணத்தைத் தொடங்கும் வேளையில், வரலாறு அவரை கனிவாக மதிப்பிடுவதோடு மட்டுமல்லாமல், உண்மையான மண்ணின் மகன் என்பதால் வணக்கம் செலுத்தும்." என்று கூறியுள்ளார்.

மாநிலங்களவை எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பிரமோத் திவாரி தனது இரங்கல் செய்தியில், "மன்மோகன் சிங்கின் மறைவு அரசிய லுக்கு அப்பாற்பட்டு பொருளாதாரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் உலக ஆளுமைகளுக்கு அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது. இன்று, மன்மோகன் சிங்கின் தாராளமயமாக்கல் கொள்கை யால், கோடிக்கணக்கான குடும்பங்கள் 'உணவு உரிமை' பெறுகின்றன.

MNREGA மூலம், இந்தியாவின் தொலைதூர கிராமங்களில் உள்ள மக்களை வேலை வாய்ப்புகள் சென்றடைந் துள்ளன. கொரோனா காலத் தில், இந்த திட்டத்தின் மூலம், கோடிக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை ஈட்ட முடிந்தது. தலைசிறந்த மேதையும், முன்னாள் பிரதம ருமான டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு எனது நன்றி யையும், அஞ்சலியையும், மரியா தையையும் தெரிவித்துக் கொள்கிறேன்." என குறிப் பிட்டுள்ளார்.

## அண்ணா பல்கலை., சம்பவத்தை கண்டித்து கோவையில் அண்ணாமலை சாட்டையடி போராட்டம்

கோவை, டிச.28

அண்ணா பல்கலை மாணவி பாலியல் வன்கொடுமையை கண்டித்தும், திமுக அரசை கண்டித்தும் கோவையில் தனது வீட்டு முன்பு பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தன்னைத் தானே சாட்டையால் அடித்து இன்று (டிச.27) காலை போராட்டம் நடத்தினார்.



செய்தியாளர்களை சந் தித்த அண்ணாமலை, "இன்று நாங்கள் முன்னெடுத்துள்ள இந்தப் போராட்டம் இன்னும் தீவிரமடையும். இது தனி நபருக்கு எதிரான போராட்டம் அல்ல. தமிழகத்தில் கல்வித் தரம் குறைந்துள்ளது. பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது. காவல் துறையின் கைகள் கட்டப்பட் டுள்ளன. பெண்களுக்கு பாது காப்பற்ற சூழல் நிலவுகிறது. எனவே இந்தப் போராட்டத்தை நாங்கள் முன்னெடுத்துள்ளோம்.

எதற்காக 6 முறை சாட்டையடி என்று நீங்கள் கேட்கலாம். முருகப் பெருமானிடம் இந்த ஆறு சாட்டையடி மூலம் ஒரு வேண்டுதல் வைத்துள்ளோம். நம் தமிழ் மண்ணில் உடலை வருத்தி இறைவனிடம் வைக்கப் படும் வேண்டுதலுக்கு ஒரு விளைவு இருக்கும் என்பது நம்பிக்கை. நான் அந்த மர பையே பின்பற்றி இந்தப் போராட்டத்தை முன்னெடுத் துள்ளேன். தெரிந்தோ தெரியா மலோ நாங்களே கூட ஏதேனும் தவறு செய்திருக்கலாம். அதற் குக் கூட இது தண்டனையாக இருக்கட்டும்.

நான் காவல்துறையில் ஐபிஎஸ் அதிகாரியாக இருந்தபோது 10 ஆம் வகுப்பு மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள் ளாக்கி கொல்லப்பட்ட வழக்கை விசாரித்தேன். குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தந்தேன். அப்போது அந்தச் சிறுமியின் தாய் என்னிடம் "குற்றவாளியை பிடித்துவிட்டீர்கள், என் மகளைத் திருப்பித் தருவீர்களா?" எனக் கேள்வி கேட்டார். அந்தக் கேள்வி என்னை அரசியலில் பயணிக்க வைத்தது. எல்லோரையும் போல் ஒரு பிரச்சினை வரும்போது அதைப்பற்றி பேசிவிட்டு பின்னர் மறந்துவிட்டு அதன் பின்னர் அடுத்த பிரச்சினையைப் பேசும் அரசியல்வாதியாக என்னால் இருக்க முடியவில்லை. இந்தச் சம்பவம் என்னை வெகுவாக பாதித்துவிட்டது.

அதனால், நான் நன்றாக யோசித்தே இந்த முடிவை எடுத்துள்ளேன். திமுக ஆட்சி யிலிருந்து அகற்றப்படும் வரை காலணியை அணியப் போவதில்லை. இந்த ஆட்சி தவறு செய்கிறது. அறவழியில் போராடக் கூட அனுமதியில்லை. எல்லாவற்றையும் கண்டித்தே நாங்கள் போராட்டத்தை கையில் எடுத்துள்ளோம். நாங்கள் தவறு களைக் கண்டித்து அரசியல் செய்கிறோம்.

லண்டன் சென்று திரும்பிய பின் என் அரசியல் பார்வை மாற்றம் பெற்றுள்ளது. மற்ற படி என்னைப் பற்றி சமுகவலை தளங்களில் விமர்சிப்பவர்கள் பற்றி எனக்குக் கவலையில்லை" என்றார்.

முன்னதாக, அண்ணாமலை சாட்டையால் அடித்துக் கொண்ட போது பாஜக தொண்டர்கள் வெற்றிவேல், வீரவேல் என்றும், வேண்டாம், வேண்டாம் சாட்டை யடி வேண்டாம் என்றும் கோஷங் களை எழுப்பினர்.


## அண்ணா பல்கலை., மாணவி பாலியல் வன்கொடுமை சென்னை ஐகோர்ட் தாமாக முன்வந்து விசாரணை

சென்னை, டிச.28

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரம் தொடர் பாக தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட சென்னை உயர் நீதி மன்றம் சம்பவம் தொடர்பாக விளக்கம் அளிக்கும்படி தமிழக அரசுக்கும், காவல்துறைக்கும் உத்தரவிட்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழக இரண்டாம் ஆண்டு மாணவி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தமிழ கம் முழுவதும் பெரும் பர பரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பான காவல்துறையின ரின் விசாரணையில் குறைபாடு கள் உள்ளதாகவும், சட்டப்படி பாதிக்கப்பட்ட பெண்ணின் அடை யாளத்தை வெளிப்படுத்தக் கூடாது என்ற போதிலும் வழக்கின் முதல் தகவல் அறிக்கை காவல்துறையினரால் வெளியிடப்பட்டுள்ளது என்ப தால் இந்த சம்பவம் தொடர்பான வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட வேண்டும் என பெண் வழக்கறிஞர் வர லட்சுமி சென்னை உயர் நீதிமன் றத்துக்கு இன்று கடிதம் அனுப்பி



இருந்தார்.

அந்த கடிதத்தில் வழக்கில் சம்பந்தப்பட்ட ஒருவரை கைது செய்துள்ளதாக காவல்துறை தெரிவித்து இருக்கிறது ஆனால் பாதிக்கப்பட்ட பெண்ணின் வாக்குமூலத்தில் மற்றொரு நபரையும் குறிப்பிட்டு இருக் கிறார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில் நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம் மற்றும் வி.லக்ஷ்மி நாராயணன் அடங்கிய அமர்வில் வழக்கறிஞர் வரலட்சுமி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஜெயபிரகாஷ் கடிதத்தின் அடிப்படையில் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு விசாரணையை சிபிஐக்கு மாற்ற உத்தரவிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதே போல மற்றொரு வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி முதல் தகவல் அறிக்கையை காவல்துறையினர் வெளி யிட்டதன் காரணமாக பாதிக்கப் பட்ட பெண்ணின் ஒட்டு மொத்த குடும்பமும் பாதிக்கப் பட்டிருக்கிறது. அண்ணா பல் கலைக்கழகம் மட்டுமல்லா மல் அனைத்து கல்வி நிறுவ னங்களின் விடுதிகளில் தங்கி படிக்கும் மாணவிகளின் பாது காப்பு கேள்விக்குறியாகி இருக் கிறது என்பதால் தாமாக முன் வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முறையிட்டார்.

இரு வழக்கறிஞர்களின் முறை யீட்டையும் பெண் வழக்கறி ஞர்களின் கடிதத்தையும் ஆய்வு செய்த நீதிபதிகள் காவல்துறையினரின் புலன் விசாரணை குறித்து தீவிர மான குற்றச்சாட்டுகள் தெரிவிக் கப்பட்டுள்ளதால் பெண் வழக் கறிஞர் வரலட்சுமி கடிதத்தின் அடிப்படையில் நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள் வதாக தெரிவித்தனர்.

மேலும், இந்த வழக்கில் தமிழக உள்துறை செயலாளர், டிஜிபி, சென்னை மாநகர காவல் ஆணையர், அண்ணா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மற்றும் பதிவாளர், கோட்டூர்புரம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோரை எதிர்மனுதாரராக சேர்க்க உத்தரவிட்டனர்.

மேலும், தமிழக அரசு மற்றும் காவல்துறையின் விளக்கத்தை பெறாமல் எந்த உத்தரவும் பிறப் பிக்க முடியாது என தெரிவித்த நீதிபதிகள், இது தொடர்பாக பிற்பகல் 2:15 மணிக்கு தமிழக அரசு மற்றும் காவல் துறையின ரின் விளக்கத்தைப் பெற்று தெரிவிக்கும்படி உத்தரவிட்டு விசாரணையை பிற்பகல் தள்ளி வைத்துள்ளனர்.

## ஆன்மிக தலங்களில் ரகசிய கேமரா குறித்து ஆய்வு செய்ய இந்து முன்னணி வலியுறுத்தல்

சென்னை, டிச.28

இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிர மணியம் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழகத்தில் ராமேஸ்வரம், பழனி, திருச்செந்தூர், மதுரை, ஸ்ரீரங்கம், கும்ப கோணம் போன்ற புண்ணிய ஸ்தலங்க ளுக்கு லட்சக்கணக்கான பக் தர்கள் மாதம்தோறும் வரு கின்றனர்.

வரக்கூடிய பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடனை தீர்க்கவும், துன்பகள் தீர்ந்து குடும்பத்தில் நல்ல நிலை உருவாக வேண்டும் என்று நினைத்து வருகிறார்கள். வரக்கூடிய பக்தர்களில் பெரும் பான்மையானவர்கள் வசதி வாய்ப்பற்ற சாதாரண மக்கள். அவ்வாறு வரும் பக்தர்க ளுக்கு என இந்து சமய அறநிலைத்



துறையால் போதுமான அளவில் தங்கும் இடம் மற்றும் குளிய லறை, கழிப்பறை, உடை மாற்றும் அறை போன்ற அடிப் படை வசதிகளை செய்து தர வில்லை.

இதனால் சாமி தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் தனியார்கள் நடத்துகின்ற தங்கும் விடுதிகள், குளியலறை, கழிப்பறை, உடைமாற்றும் அறைகளை பயன்படுத்துகின்றனர். இவ்வாறு பக்தர்கள் பயன்படுத்தும் போது தனி நபர்கள் அந்த அறைகளில் ரகசிய கேமராவை பொருத்தி பெண்களின் படம் எடுக்கும் அவலம் ஏற்படுகிறது.

எனவே தமிழகத்தில் உள்ள அத்தனை ஆன்மிக தலங்களி லும் உள்ள தங்கும்விடுதிகள் மற் றும் குளியலறைகள், கழிப்ப றைகள் உடை மாற்றும் அறைக ளில் ரகசிய கேமராக்கள் இருக்கி றதா என தமிழக அரசு ஆய்வு செய்யவேண்டும் என இந்து முன் னணி கேட்டுக்கொள்கிறது. இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் ஒருங்கிணைந்த தடுப்பூசி திட்டத்தில் விடுபட்ட குழந்தைகளுக்கு சிறப்பு தடுப்பூசி முகாம்

சென்னை, டிச.28

தமிழகத்தில் ஒருங்கிணைந்த தடுப்பூசி திட்டத்தில் விடுப்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு தடுப்பூசி முகாம் 31ம் தேதி வரை நடைபெறுகிறது. தேசிய தடுப்பூசி அட்டவணையின் கீழ் மொத்தம் 11 வகையான தடுப்பூசிகள் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன.

இந்த திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் 9.40 லட்சம் குழந்தை களுக்கு தடுப்பூசி போடப்படு கிறது. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதல் மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் வரை 11,000க்கும் மேற்பட்ட இடங்களில் தடுப்பூசிகள் அளிக் கப்படுகின்றன.

இதில், ஆரம்ப சுகாதார நிலை யங்களில் வாரத்திற்கு ஒருமுறை தடுப்பூசி செலுத்தப்படுகிறது. இந்நிலையில், முதல் தவ



ணைக்கு பின், அடுத்த தவ ணையை சில குழந்தைகளுக்கு உரிய நேரத்தில் பெற்றோர் செலுத்தாததால், 100 சதவீத தடுப்பூசி இலக்கு எட்டப்பட வில்லை.

நடப்பாண்டு முடியவுள்ள நிலையில், அனைத்து குழந் தைகளுக்கும் தடுப்பூசி செலுத் திருப்பதை உறுதி செய்யும் வகையில், சிறப்பு தடுப்பூசி முகாமை பொது சுகாதாரத்துறை நடத்தி வருகிறது. இதில், பாக் டீரியா மூலமாக பரவும் நிமோ னியா மூளைக் காய்ச்சல் உள் ளிட்ட 5 வகையான நோய்களில் இருந்து குழந்தையை பாதுகாக்க பெண்டாவேலன்ட் தடுப்பூசி போடும் முகாம் வரும் 31ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இதுதொடர்பாக தமிழக பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வவிநாயகம் கூறுகையில், "குழந்தை பிறந்து 4, 10, 14வது வாரங்களில், பெண்டாவேலன்ட் தடுப்பூசி செலுத்தப்படுகிறது. உரிய தவணையில் தடுப்பூசியை செலுத்த தவறியவர்களுக்காக, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வரும் 31ம் தேதி வரை தடுப்பூசிகள் செலுத்தப்படும்.

இதில், பெண்டாவேலன்ட் தடுப்பூசி மட்டுமின்றி, ஒருங்கி ணைந்த தடுப்பூசி திட்டத் தில் விடுபட்ட மற்ற தடுப்பூசி களையும், குழந்தைகளுக்கு போட்டுக்கொள்ள பெற்றோர் முன்வர வேண்டும். இதன் மூலம் குழந்தைகளுக்கான பல்வேறு நோய் பாதிப்புகளில் இருந்து தற்காத்து கொள்ள முடியும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கண்ணாடி வாப்பா சர்வதேச பள்ளியில் விளையாட்டு தினக்கொண்டாட்டம்

கீழக்கரை டிச28

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் கண்ணாடி வாப்பா சர்வதேசப் பள்ளி நடப்பாண்டுக்கான விளை யாட்டுப் போட்டிகள் 26.12.2024 அன்று சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக இந்திய அளவிலான மோட்டார் பந்தய வீராங்கனை நிவேதா ஜெசிகா கலந்து கொண்டு ஒலிம்பிக் ஜோதியை ஏற்றி வைத்து விழாவினை தொடங்கி வைத்தார்.அதன்பிறகு பள்ளி யின் நிறுவனர் மற்றும் தலைவர் செய்யது முகமது சலாஹூதீன் உடன் பள்ளியின் தாளாளர் மரியம் செய்யது சலாஹூதீன் மற்றும் பள்ளி யின் அறக்கட்டளை நிர்வாகி பேராசிரியர் டாக்டர் முகம்மது



அப்துல் காதர் ஆகியோர் முன் னிலை வகித்து சமாதானப் புறாக்களை பறக்க விட்டனர்.

பின்னர் மாணவ மாணவியர் களுக்கு பதக்கங்களையும் ,வெற்றிச்சான்றிதழ்களையும் பள்ளி முதல்வர் பிரமோதா மேனனுடன் இணைந்து சிறப்பு விருந்தினர் வழங்கினர் .விழா நிகழ்வினை பள்ளி நிர்வாக அலுவலர் முஹம்மது அன்சார் ஒருங்கிணைத்தார்.

## இராமநாதபுரம், அரசு மருத்துவக்கல்லூரியில் தற்காலிக பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம்

இராமநாதபுரம், டிச.28

இராமநாதபுரம், அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் தற்காலிக ஒப்பந்த அடிப்படையிலான காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளது. விண்ணப்பங்கள் ‘https://ramanathapuram.nic.in/”, https://ramanathapuram.nic.in/notice_category/recruitment/ vd;w,izajsj;jpy; என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், நிரப்பப் பட்ட விண்ணப்பங்களை முதல் வர், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, இராமநாதபுரம்




623501 அலுவலகத்தில் நேரிலோ அல்லது தபால் வழியாகவோ சமர்ப்பிக்கலாம் என அரசு மருத் துவக்கல்லூரி மருத் துவமனை முதல்வர் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## பழனியில்பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை கடைகளுக்கு நகராட்சி அபராதம்

பழனி டிச28

திண்டுக்கல் மாவட்டம் சுற்றுலாத்தலமான பழனியில், திருமண மண்டபங்கள் உள் ளிட்ட இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பிளாஸ்டிக் இலைகள், டம்ளர்கள், தட்டுகள் பயன்படுத்தினால் கடும் நடவ டிக்கை எடுக்கப்படும் என எச்ச ரிக்கப்பட்டது. இருப்பினும், பிளாஸ்டிக் பொருட்கள் பயன் பாடு அதிகரித்து வருகிறது.



இந்தநிலையில் தடை செய்த பிளாஸ்டிக்பொருட்களை தவிர்த் திடும் வகையில். நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நகர் நல அலுவலர் மனோஜ் தலைமை யில் அனைத்து கடைகளிலும் சோதனை மேற்கொண்டனர் அப்பொழுது உழவர் சந்தை அருகில் உள்ள கடை ஒன்றில் அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் கேரி பேக்குகள் பிளாஸ்டிக் கப்புகள் பார்சல் பேப்பர்களை பிளாஸ்டிக் பொருட்களை மூட்டை மூட்டைய ாக எடுக்கப்பட்டது அக்கடைக்கு நகராட்சிநிர்வாகம் அவதாரம் விதிக்கப்பட்டது.

தொடர்ந்து பழனி பகுதிகளில் அனைத்து கடைகளிலும் சோதனை மேற்கொண்டனர்.

## திருவாடானை ஆலயத்தில் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் -அன்னதானம்

திருவாடானை.டிச28

திருவாடானை ஆலயத்தில் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் சிறப்பு தரிசனம் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி எதிரே உள்ள மங்களநாதன் குளக்கரையில் அமைந்துள்ளது ஸ்ரீ தர்மசாஸ்தா ஆலயம் .

இந்த ஆலயத்தில் வியாழக்கிழமை மண்டல பூஜை வெகு சிறப்பாக நடைபெற்றது ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக மூலவருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் தொடர்ந்து நடைபெற்று வந்தது அதனை தொடர்ந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று சுவாமி தரிசனம் செய்தனர் அதனை தொடர்ந்து கோவில் நிர்வாகம் சார்பில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.திருவாடானை சுற்று வட்டார பகுதியில் உள்ள பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.









சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தி அருகே சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வராஜ் தலைமையில் காவலர்கள் வாகன சோதனையில் ஈடுபட்டனர் அப்போது அவ்வழியே வந்த இளைஞரை சோதனை செய்ததில் 3 கிராம் எடையுள்ள 18 கஞ்சா பாக்கெட்டுகள் இருந்தது காவல்துறையினர் விசாரணையில் தூதை கிராமத்தைச் சேர்ந்த கார்த்திகைச்சாமி மகன் பெரியசாமி (22) என்பது தெரியவந்தது அவரிடம் இருந்து கஞ்சா பாக்கெட்டுகளை காவல்துறையினர் கைப்பற்றினார்.

## மூத்த தலைவர் அய்யா நல்லகண்ணுவின் 100வது பிறந்தநாளுக்கு பெயிரா புகழாரம்

அகில இந்திய ரியல் எஸ் டேட் கூட்டமைப்பின் நிறு வனர் மற்றும் தேசியத் தலைவர் டாக்டர் ஆ.ஹென்றி, மூத்த தலைவர் அய்யா நல்லக் கண்ணுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து செய்தி வெளி யிட்டுள்ளார்:

மேலும் அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் ..

அரசியல் எல்லைகளைக் கடந்து, அனைத்து கட்சியின ராலும் மதிக்கப்படும் போராளி நல்லகண்ணு அய்யா அவர்கள், பொதுவாழ்க்கையில் எளிமைக் கும், அரசியலில் தூய்மை யானவர் என்பதற்கும் இன்று வரை ஒரே எடுத்துக்காட்டாய் விளங்கி கொண்டிருக்கிறார்” என்று மூத்த தலைவர் அய்யா நல்லகண்ணுவுக்கு பெயிரா தலைவர் டாக்டர் ஹென்றி புக ழாரம்..

“நேர்மை, தியாகம், தன்னல மற்ற உழைப்பு, அடக்கு முறைக்கு அஞ்சாத தீரம் போன்ற வற்றின் மறுபெயர்தான் நல்ல கண்ணு. இதே 100 வருடங்களுக்கு முன்பு, தாமிர பரணி ஆற்றங்கரையில் அமைந் துள்ள ஒரு கிராமத்தில் பிறந் தவர் அய்யா நல்லகண்ணு. இதே நாளில்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் தொடங் கப்பட்டது... கட்சி தோன்றிய நாளில் தோன்றிய ஒரே மனிதர் அய்யா நல்லகண்ணுதான்.

ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு நடுத்தர விவசாயக் குடும்பத்தில் பிறந்த நல்லகண்ணு, பள்ளிப் பருவத்திலேயே



விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர். தன்னுடைய 15 வயதிலேயே பொதுவுடைமைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டு பல தியா கங்களைச் செய்தவர்.

1949ம் ஆண்டு தலைமறைவு காலத்தில் தோழர் ஒருவரின் வீட்டில் நல்லகண்ணு தூங்கிக்கொண்டிருந்தபோது, திடீரென போலீசார் அவரையும் அவரது நண்பர்களையும் சுற்றி வளைத்தது. மலைஉச்சியி லிருந்து உருட்டி விடுவதாகவும், “உன் தோழர்கள் எங்கே?” என்று கேட்டும் மிரட்டியபோதும், “தெரியாது” என்ற பதிலையே நல்லகண்ணு திரும்ப திரும்ப சொல்லி கொண்டிருந்தார்.

இதனால் பொறுமை இழந்த ஒரு போலீஸ் அதிகாரி, கையில் விலங்கு பூட்டி, சித்ரவதை செய்து, அவரது மீசையையும், கன்னத்தையும் தீயிட்டு பொசுக் கினார். எனினும், கடைசிவரை நல்லகண்ணுவிடம் இருந்து எந்த பதிலையும் காவல்துறை யினரால் பெற முடிய வில்லை. நெல்லை சதி வழக்கில் சேர்க்கப்பட்டு, ஆயுள் தண்டனையையும் அனுப வித்தார். இதுபோல பாறையை போல துணிச்சலுடன், எண் ணற்ற அடக்குமுறைகளையும் எதிர்கொண்ட அஞ்சாநெஞ்ச சிங்கம்தான் அய்யா நல்ல கண்ணு..

அனைத்து தரப்பு மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கும் அய்யா நல்லகண்ணு, இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக 13 வருடங்கள் செயலாற்றியவர். கிட்டத்தட்ட 70 ஆண்டுகளுக்கும் மேலாகப் பொதுவாழ்வில் தன்னை அர்ப்பணித்துக்கொண் அய்யா நல்லகண்ணு, 25 ஆண்டுகள் தமிழ்நாடு விவசாய தொழி லாளர் சங்க தலைவராக இருந் திருக்கிறார்.

தன் இனத்து மக்களையே எதிர்த்துப் போராடி, அடித்தட்டு மக்களை தட்டி எழுப்பி, சமூக நீதியை நிலைநாட்ட தொடர்ந்து போராடி கொண்டிருக்கும் அற்புத மனிதர். மக்களுக்கா கவே தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டு, வாழ்க்கை முழுவதும் தியாக வாழ்க்கை வாழ்ந்து வருபவர். நதிநீர் உரிமைகளுக்காகவும், சுற்றுச்சூழலை காப்பதற்காக வும், மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்தவும் தொடர்ந்து போராடும் நெஞ்சுரம் மிக்கவர்.

அரசியல் எல்லைகளைக் கடந்து, அனைத்து கட்சியின ராலும் மதிக்கப்படும் போராளி நல்லகண்ணு அய்யா அவர் கள், பொதுவாழ்க்கையில் எளிமைக்கும், அரசியலில் தூய்மையானவர் என்பதற் கும் இன்றுவரை ஒரே எடுத் துக்காட்டாய் விளங்கி கொண் டிருக்கிறார். எதிர்கால அரசி யலில் ஈடுபடும் இன்றைய இளைஞர்களுக்கும், மிகச் சிறந்த வாழ்வியல் உதார ணமாக திகழ்ந்து கொண்டி ருக்கிறார்.

அய்யா நல்லகண்ணு அவர்கள் மேலும் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும், மன உறுதியுடனும், நீடூழி வாழ்ந்து தாங்கள் சார்ந்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், பொது வாழ்வில் தொடர்ந்து ஈடுபடு வதன் மூலம் நாட்டு மக்க ளுக்கும் சிறந்த தொண்டினை ஆற்றிட இந்த நன்னாளில் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து கொள்கிறேன்” என்று டாக்டர் ஹென்றி தன்னு டைய வாழ்த்து செய்தியில் தெரி வித்துள்ளார்.

## அறிஞர் அண்ணா, துணை முதல்வர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தென்காசியில் மாணவ மாணவியருக்கான மிதிவண்டி போட்டி

தென்காசி டிச28

தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு முன்னாள் முதல மைச்சர் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு இளைஞர்நலன் (ம) விளை யாட்டு மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம் பாட்டு ஆணையம் சார்பில் பள்ளி மாணவ, மாணவியர் களுக்கான மிதிவண்டி போட்டி கள் நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தகவல்

இளைஞர்நலன் (ம) விளை யாட்டு மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தென் காசி மாவட்டத்தில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு 04/01/2025 அன்று அறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டிகள் நடத் திட




திட்டமிடப்பட்டுள்ளது. அதன் படி 13 வயதிற்குட்பட்ட மாணவர் களுக்கு 15 கி.மீ தூரமும், 13 வயதிற்குட்பட்ட மாணவி களுக்கு 10 கி.மீட்டர் தூரமும், 15 வயதிற்குட்பட்ட மாணவர் களுக்கு 20 கீ.மீட்டர் தூரமும், 15 வயதிற்குட்பட்ட மாணவி களுக்கு 15கி. மீட்டர் தூரமும், 17 வயதிற்குட்பட்ட மாணவர் களுக்கு 20 கீ.மீட்டர் தூரமும், 17 வயதிற்குட்பட்ட மாணவிகளுக்கு 15 கி.மீட்டர் தூரமும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. போட்டி யானது 04/01/2025 அன்று காலை 6, 00 மணிக்கு தென்காசி குத்துக்கல்வலசை

ஐ.டி. வாழைக்காய் மண்டி யிலிருந்து தொடங்கப்பட உள் ளது. போட்டிகளில் பங்கேற்கும் அனைவரும் இந்தியாவில் தயாரான சாதாரண மிதி வண்டியை மட்டுமே பயன் படுத்த வேண்டும்.

போட்டியில் பங்கேற்கும் அனைவரும் முன்பதிவு செய் திருக்க வேண்டும், முன் பதிவு செய்திட கடைசி நாள் 03/01/2025 மாலை 5.30 மணி ஆகும். போட் டியில் பங்கு பெறும் அனை வரும் தங்கள் பள்ளியிலிருந்து (உறுதி சான்றிதழ்) போனபைடு சான்றிதழ் கண் டிப்பாக சமர் பிக்கப்பட வேண்டும். போட்டி யில் வெற்றி பெறும் ஒவ்வொரு பிரிவு மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கு முதல் பரிசாக ரூ.5000/, இரண்டாம் பரிசு ரூ.3000/, மூன்றாம் பரிசு ரூ.2000/ நான்காம் பரிசு முதல் பத்தாம் பரிசு வரை ரூபாய் 250/ம் சான்றிதழ்களும் வழங் கப்பட உள்ளன. வெற்றி பெறுப வர்களுக்கு பரிசுத் தொகை யானது NEFT மூலம் வழங்கப் படவுள்ளதால் தங்களின் வங்கி கணக்கு முதல் பக்க நகலை கண்டிப்பாக கொண்டுவர வேண்டும்.

முன்பதிவு செய்திட (ம) மேலும் விபரங்களுக்கு தமிழ் நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாவட்ட விளை யாட்டு அலுவலகம், 163கி, ரயில்நகர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறம் என்ற முகவரியில் நேரிலோ அல்லது 04633 212580/ 8608061125 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

## கம்பத்தில் மக்கள் நலம் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக இரட்டை மாட்டு வண்டி பந்தயத்திற்கான அழைப்பிதழ்

கம்பம் டிச.28

கம்பத்தில் மக்கள் நலம் முன் னேற்ற சங்கத்தின் சார்பாக நடைபெற உள்ள இரட்டை மாட்டு வண்டி பந்தையத் திற்கான அழைப்பிதழ் வழங் கப்பட்டது.

தேனி மாவட்டம் மக்கள் முன் னேற்ற சங்கம் கம்பம் ஒன்றி யத்தின் சார்பில் நடைபெற உள்ள இரட்டை மாட்டு வண்டி பந்தயத்திற்கான அழைப்பிதழ்,

நன்கொடை ரசீது, 2025 ஆண்டுக்கான மாத இதழ் காலண்டர் மற்றும் உறுப்பினர்



சேர்க்கை ஆகியவற்றை நிறுவனத் தலைவர் பாளை. இரா. கணேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச் சியில் தேனி மாவட்டச் செயலாளர் சுல்தான் சையது இப்ராஹிம் , மாநிலச் செயலாளர் சந்திர பாண்டியன், மாநில மகளிர் அணி ஒருங் கிணைப்பாளர் அபிநயா, மாநில வர்த்தக அணி செயலாளர் மணிகண்டன், தேனி மாவட்ட ஊடக பிரிவு செயலாளர் ஆனந்தன், கம்பம் ஒன்றிய செயலாளர் பிரபாகரன், பொரு ளாளர் குமரேசன், உத்தம பாளையம் ஒன்றிய செயலாளர் மாரிச்சாமி ,மகளிர் அணி மாவட்ட துணை செயலாளர் சத்யா மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பொழிச்சலூர் பகுதி தமிழக வெற்றி கழகம் சார்பில் மாபெரும் கண் சிகிச்சை முகாம்

பொழிச்சலூர் டிச28

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பொழிச்சலூர் பகுதி தமிழக வெற்றி கழகம் சார்பில் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் மாவட்ட தலைமை பொலிச்சலூர் ஜே.மணி ஜெயமோகன் மாவட்ட தலைமை ஏற்பாட்டில் நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் செங்கல் பட்டு மேற்கு மாவட்ட தலைவர் மின்னல் வீ.குமார் பங்கேற்று கண் சிகிச்சையின் முகாமை துவக்கி வைத்து 75க்கும் மேற்பட்டோருக்கு இலவச கண்ணாடியை வழங்கி சிறப் பித்தனர்.

நடைபெற்ற இலவச கண்



சிகிச்சையில் 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர், உடன் நிகழ்ச்சியில் மாவட்ட கவுரவ தலைவர் சங்கர், பல்லாவரம் தம்பி ராஜா, மாவட்ட வழக்கறிஞர் பிரிவு ராஜகுமாரன், தொகுதி தலைவர் சுறா ரவி, தொகுதி செயலாளர் அரவிந்த், தொகுதி துணை தலைவர் பார்த்திபன், பரங்கிமலை ஒன்றியம் மணிகண்டன், தொகுதி வழக்கறிஞர் பிரிவு ரபேக்கா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு எஸ்.ஜான், பல்லாவரம் பகுதி தேசக்குமார், கார்த்திக், பொழிச்சலூர் பகுதி தலைமை நிர்வாகிகள் பொழிச்சலூர் பொருளாளர் சந்துரு , பிரதீப் குமார், வினோத்குமார், கே.எஸ்.ஆர்.சுரேஷ், அருண் குமார், சுந்தர், மகளிர் அணி நிர்வாகிகள் இந்துமதி, நந்தினி உட்பட தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் அரங்கில் மாமன்றக் கூட்டம் மேயர் இந்திராணி பொன்வசந்த் தலைமையில் நேற்று நடைபெற்றது அருகில் ஆணையாளர் .ச.தினேஷ் குமார், துணை மேயர் தி.நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.

## பெரியகுளத்தில் சிதம்பர தீர்த்த தொட்டி அருகில் மாபெரும் அன்னதானம் வழங்கல்

பெரியகுளம், டிச28

தேனி மாவட்டம் பெரியகுளம் சோத்துப்பாறை செல்லும் வழியில் உள்ள தீர்த்த தொட்டி அருகில் மார்கழி மாதம் முதல் சோமவாரம் மாபெரும் அன்னதானம் நடைபெற்றது. இந்நிகழ்வில் 75 வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருகிற விஸ்வ பிராமண 300 வீட்டு வகுப்பு சமாதரனை சங்கத்தின் சார்பாக மாபெரும் அன்னதானம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் பக்த கோடிகளும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் அன்னதானத்தில் கலந்து கொண்டனர்.



## திண்டுக்கல் மாவட்ட அளவில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான பேரறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டி

திண்டுக்கல் டிச28

திண்டுக்கல் பிரிவில் 202425 ஆம் ஆண்டிற்கான பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடும் பொருட்டு மாவட்ட அளவிலான பள்ளி மாணவ, மாணவிகளுக்கான பேரறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டி 04.01.2025 அன்று காலை 7.00 மணிக்கு மாவட்ட விளையாட்டரங்கத்தில் நடைபெற உள்ளது.

இப்போட்டியானது, 13 வயது, 15 வயது மற்றும் 17 வயது என 3 பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது. 13 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு 15 கி.மீட்டர் தூரம், மாணவிகளுக்கு 10 கி.மீட்டர் தூரம், 15 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு 20 கி.மீட்டர் தூரம், மாணவிகளுக்கு 15 கி.மீட்டர் தூரம், 17 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு 20 கி.மீட்டர் தூரம், மாணவிகளுக்கு 15 கி.மீட்டர் தூரம்



போட்டிகள் நடைபெறும்.


அண்ணா மிதிவண்டி போட்டியில் பங்கு பெற விருப்பம் உள்ள மாணவ, மாணவிகள் இந்தியாவில் தயாரான சாதாரண மிதிவண்டிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். மேலும் பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியையிடம் வயது சான்றிதழ் கண்டிப்பாக பெற்று வருதல் வேண்டும்.

இப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் இடம் பெறுபவர்களுக்கு ரூ.5000, 2ஆம் இடம் ரூ.3000, 3ஆம் இடம் பெறுபவர்களுக்கு ரூ.2000 மற்றும் 4 முதல் 10ஆம் இடம் பெறுபவர்களுக்கு ரூ.250 வீதம் பரிசு தொகை (காசோலையாக) மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், மாவட்ட விளையாட்டரங்கம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் தாடிக்கொம்பு ரோடு, திண்டுக்கல்-624 004 என்ற முகவரியில் நேரிலோ அல்லது கைப்பேசி எண் 7401703504 வாயிலாகவோ சம்பந்தப்பட்ட அலுவலர்களை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி, தெரிவித்துள்ளார்.



இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் அருகே கருங்குடி ஊராட்சி கொத்தியார்கோட்டை கிராமத்தில் நேற்று முன்தினம் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த மூதாட்டியின் தங்கச் செயினை பறித்துச் சென்ற குற்றவாளிகளை 15 மணி நேரத்திற்குள் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் ஒப்படைத்த திருப்பாலைக்குடி காவல் ஆய்வாளர் ஜெய்சங்கர் மற்றும் சக காவல்துறை அதிகாரிகளின் செயலை பாராட்டி ஆர் எஸ் மங்கலம் ஒன்றிய பெருந்தலைவர் இராதிகாபிரபு. நேரில் சென்று வாழ்த்து கூறினார்.



வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, இளையநல்லூர் ஊராட்சியில் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின்கீழ் ரூ.23.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டடத்தை நீர்வளத்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினர். இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நீசெந்தில்குமரன், காட்பாடி மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார், மக்கள் பிரதிநிதிகள், வட்டார வளர்ச்சி அலுவலர் நந்தகுமார்,அரசுத் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சின்னக்காம்பட்டி, எல்லைப்பட்டி மற்றும் மார்க்கம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் திட்டப்பணிகளை திறந்து வைத்த உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர்

ஒட்டன்சத்திரம் டிச28



திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், சின்னக்காம்பட்டி, எல்லைப்பட்டி மற்றும் மார்க்கம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் ரூ.2.80 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நேற்று முன்தினம் திறந்து வைத்து, ரூ.1.30 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டு பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறார்.

ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, சின்னக்காம்பட்டி ஊராட்சியில் கோமாளிப்பட்டி மற்றும் நாரணப்பநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களில் தலா ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பயணியர் நிழற்குடை, நமக்குநாமே திட்டத்தில், சின்னக்காம்பட்டி ஊராட்சியில், கோமாளிப்பட்டி, இராகவநாக்கன்பட்டி கிராமங்களிலும், எல்லப்பட்டி ஊராட்சியில் எல்லப்பட்டி ஆகிய கிராமங்களிலும் தலா ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டிலும், நாரணப்பநாயக்கன்பட்டியில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்பட்ட சமுதாயக் கூடங்கள், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், சின்னக்காம்பட்டி ஊராட்சியில் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில்



கட்டப்பட்ட நூலக கட்டடம் மற்றும் ரூ.16.55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டடம், மார்க்கம்பட்டி ஊராட்சியில் ரூ.16.55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டடம், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், எல்லப்பட்டி ஊராட்சியில் எல்லப்பட்டியில் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் அண்ணாநகரில் ரூ.9.32 இலட்சம் மதிப்பீட்டிலும், மார்க்கம்பட்டி ஊராட்சி மார்க்கம்பட்டியில் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்பட்ட நியாய விலைக்கடை கட்டடங்கள் என மொத்தம் ரூ.2.80 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும், நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ், சின்னக்காம்பட்டி ஊராட்சியில் இராகவநாயக்கன்பட்டி முதல் மலையடிவாரம் வரையிலான சாலை ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கான பணிகள் தொடங்கிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த 26ஆம் தேதி காலையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் வாயிலாக மொத்தம் ரூ.6.59 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகள் மற்றும் மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் வாயிலாக ரூ.2.80 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், நேற்று முன்தினம் காலையில் ரூ.7.15 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டு பணிகளும், மாலையில் ரூ.1.30 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டுப்பணிகளும் தொடங்கிவைக்கப்பட்டுள்ளன.


ஆகமொத்தம் மட்டும் ரூ.9.39 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.8.45 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டுப் பணிகள் தொடங்கிவைக்கப்பட்டுள்ளன, என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

விழாவில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மு.அய்யம்மாள், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் கா.பொன்ராஜ், கூட்டுறவு சங்கங்கள் இணைப் பதிவாளர் சி.குருமூர்த்தி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் பூங்கொடி, உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) ஐ.நாகராஜன், உதவிப்பொறியாளர் விஜயராகவன், வாடிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஜோதீஸ்வரன், நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டம் உதவிப்பொறியாளர் பொன்னுவேல், இளநிலைப் பொறியாளர் கருப்பண்ணன், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## காளையார் கோவில் ஆண்டிச்சூரணியில் கிராம அறிவியல் திருவிழா கொண்டாட்டம்

காளையார் கோவில் டிச.28

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத் தில் உள்ள ஆண்டிச்சூரணி கிராமத்தில் ஆர் சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த பள்ளி கல்வித்துறை மூல மாக வானவில் மன்ற கருத்தாளர்களைக் கொண்டு கிராம அறிவியல் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். பள்ளியின் தலைமை ஆசிரியை அருள்சகோதரி மெர்சி முன்னிலை வகித்தார்.



வானவில் மன்ற கருத்தாளர் பாண்டிச்செல்வி வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக ஆர் சிநடுநிலைப்பள்ளியின் தாளாளர் அருள்தந்தை சேவியர் கலந்துகொண்டு அறிவியல் முன்னேற்றத்தால் ஏற்பட்ட பல்வேறு வளர்ச்சிகள் குறித்து உரையாற்றினார்.

வானவில் மன்ற கருத்தாளர் ஜெயப்பிரியா மாணவர்களுக்கு பல்வேறு வகையான அறிவியல் சோதனைகள் செய்து காட்டினார். மந்திரமா?தந்திரமா? தண்ணீரில் விளக்கு ஏற்றுதல் தலைகீழாக பெயர் படித்தல் பலூன் பம்ப் மாயை எழுத்து நடமாடும் மெழுகுவர்த்தி சீசா பெரிஸ்கோப் பெர்னாலி பலூன் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை காற்றால் கார் ஓட்டலாமா? ராக்கெட் செயல்படும் விதம் ஆகிய எளிய சோதனைகளை மாணவர் களுக்கு செய்து காட்டியும் அதற்கான விளக்கம் அன்றாட வாழ்வியல் பயன்பாடு பற்றியும் செய்து காண்பித்தனர்.



கலந்துகொண்ட மாணவர்கள் அனைவருக்கும் விஞ்ஞான துளிர் அறிவியல் மாத இதழ் வழங்கப்பட்டன. மாணவர்களின் பெற்றோர்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. காளையார் கோவில் வவளர்ச்சிஉபக்குழு ஒருங்கிணைப்பாளர் செல்வம் வாழ்த்துரை வழங்கினார். வானவில் மன்ற கருத்தாளர் ஜெயப்பிரியா நன்றி கூறினார். பெற்றோர்கள் ராதிகா கார்த்திகா சரண்யா ரேவதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மானாமதுரையில் அரசு அலுவலகங்கள் முன்பு அரசு ஊழியர்கள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்

மானாமதுரை டிச28.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக முதல்வர் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி அனைத்து அரசு அலுவலகங்கள் முன்பு தமிழகம் முழுவதும் நடைபெறுவதை தொடர்ந்து மானாமதுரையில் வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மானாமதுரை நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் நடைபெற்றது 10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி முழக்கங்கள் இட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.




மேலும் தமிழக அரசு இந்த இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலமாக அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை ஏற்று நிர்வாகிகளை அழைத்து பேச வேண்டும் இல்லையெனில் மாநில அளவில் பெரிய அளவில் போராட்டங்கள் நடைபெறும் எனவும் முழக்கமிட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மானாமதுரை வட்ட கிளை தலைவர் தலைவர் எஸ். கோபால் முன்னிலையாக எஸ். செல்வராஜ் துணைத் தலைவர், வாழ்த்துரை தோழர் எ. பாண்டி அரசு ஊழியர் சங்க மாவட்ட துணை தலைவர், மற்றும் இரா. மாரி மாவட்ட பொருளாளர் நன்றியுரை சப்பானி முத்து மாவட்ட இணை செயலாளர், சே.செந்தில் பெரியசாமி மானாமதுரை செயற்குழு உறுப்பினர் செந்தில்குமார் மற்றும் தோழர்கள் முருகன் சிலம்பரசன் மற்றும் அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் சங்க உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத் செய்தித்தொடர்பாளர் நியமனம்




கந்தர்வகோட்டை டிச28

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் அச்சங்கத்தின் மாநில செய்தித் தொடர்பாளராக புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வ கோட்டை ஒன்றிய ஆசிரியர் அ.ரகமதுல்லாவை நியமித்து அறிவிப்பை வெளியிட்டார்.

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அக்கச்சிப்பட்டியில் பணிபுரிந்து வரும் பட்டதாரி அறிவியல் ஆசிரியர் அ.ரகமதுல்லா என்பவரை தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில செய்தி தொடர்பாளராக நியமித்து அறிவிப்பை வெளியிட்டார்.

அறிவிப்பை வெளியிட்டு பேசிய தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் தியாகராஜன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு அதிகம் உள்ளது.

வரும் புத்தாண்டு 2025இல் இதற்கான அறிவிப்பு வெளிவரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது என்று பேசினார்.

# சிவகங்கை மாவட்டம்கூட்டுறவுத்துறையின் மூலம் பல்வேறு வகையான கடனுதவிகள் பெற்று பயனடைந்த விவசாயிகள், முதலமைச்சருக்கு நன்றி



முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திக் கொண்டு வரும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். அதில், குறிப்பாக கூட்டுறவுத் துறையின் வாயிலாக பொது மக்கள் மற்றும் விவசாய பெருங்குடி மக்களுக்கு பயனுள்ள வகையிலான எண்ணற்ற திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவில் முதல் கூட்டுறவு சங்கம் 1904ல் திருவள்ளூவர் மாவட்டத்தில் "திரூர்" என்ற கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வரும் கூட்டுறவுத் துறை, தமிழகத்தில் ஆரம்பிக்கப் பட்டது பெருமைக்குரியதாகும்.

சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 211 வகையான கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் தவிர, சிவகங்கை மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள், மீனவர் கூட்டுறவு சங்கங்கள், தொழில் கூட்டுறவு சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் என மொத்தம் 439 கூட்டுறவு சங்கங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இதுதவிர, சிவகங்கை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு, விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் நுட்பங்களை வழங்குவதற்கும், வேளாண் சாகுபடி குறித்த தகவல்கள் அளிப்பதற்கும், விளைபொருள்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்திட சந்தை வாய்ப்புகளை அமைத்து தருவதற்கும், விவசாயத்தை இலாபகரமாக மாற்றி அதிக வருவாய் பெரும் நோக்கில் 2 உழவர் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று, குறைந்த விலையில் மருந்துகள் விற்பனை செய்திடும் வகையில், 7 கூட்டுறவு மருந்தகங்கள் செயல்பட்டு வருவதுடன், மேலும் 12 இடங்களில் முதல்வரின் மருந்தகம் அமைத்திட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பகுதி மக்களையும் கூட்டுறவுத்துறையின் சேவைகள் சென்றடையும் வகையில், 100 இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் உருவாக்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் சூசையப்பர்பட்டினம், முனைவென்றி, மழவராயனேந்தல் மற்றும் முப்பையூர் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் துவங்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. மேலும், முத்துப்பட்டி, சிராவயல், கொம்புக்கரனேந்தல், கழுவன்குளம் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் விரிவாக்க மையங்களும் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் சீரான பொருளாதார வளர்ச்சி ஏற்பட நடப்பு நிதி ஆண்டில் ரூ.1388.87 கோடி மதிப்பீட்டிலான கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

அதில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிபொறுப்பேற்ற கடந்த மூன்றரை ஆண்டுகளில் சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் அனைத்து கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் 87,828 உறுப்பினர்களுக்கு ரூ.530.15 கோடி மதிப்பீட்டில் பயிர் கடனுதவியும், 33,904 உறுப்பினர்களுக்கு ரூ.178.63 கோடி மதிப்பீட்டில் கால்நடைப் பராமரிப்பு கடனுதவியும், பெண்களுக்கு 4% வட்டி விகிதத்திலும் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.0.90 கோடி மதிப்பீட்டிலான டாச் செட்கோ கடனுதவியும், சிறுபான்மையினர் வகுப்பை சார்ந்தவர்களுக்கு 4% வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.02.18 கோடி மதிப்பீட்டிலான டாம்கோ கடனுதவியும் தற்சமயம் வரை கூட்டுறவுத் துறையின் சார்பில் மாவட்டம் முழுவதும் வழங்கப்பட்டுள்ளது.

தொகுப்பு

**மு.ராஜசெல்வன்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை மாவட்டம்.

# மதுரையில் ஸ்ரீஅரோபிந்தோமீரா இன்டர்நேஷனல் பள்ளியில் ஸ்குவாஷ் உள்விளையாட்டு அரங்கம் திறப்பு விழா






மதுரை: டிச 28

மதுரை மாவட்டம் கீழமாத்தூரில் உள்ள ஸ்ரீஅரோபிந்தோ மீரா இன்டர்நேஷனல் பள்ளியில் ஸ்குவாஷ் உள் விளையாட்டு அரங்கம் திறப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக ஸ்குவாஷ் போட்டியில் அர்ஜூனா விருதை பெற்ற இந்திய வீரர் ஹரிநதர் பால் சிங் சந்து ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

விளையாட்டு அரங்கில் இரண்டு மற்றும் நான்கு வீரர்கள் சேர்ந்து விளையாடும் வகையில் பேட்மிட்டன், டென்னிஸ், ஸ்குவாஷ் ஆகிய விளையாட்டுகள் முற்றிலும் கண்ணாடியில் அரங்கம் அமைக்கப்பட்டுள் ளது. இந்நிகழ்வில் அரபிந்தோ மீரா பள்ளி குழுமத் தலைவர் சந்திரன், பள்ளியின் நிர்வாக இயக்குனர் அபிலாஷ் மற்றும் தலைமை ஆசிரியர்கள் பயிற்சி ஆசிரியர்கள்மாணவ மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் தூய்மைப்பணியாளர்களுக்கு நவீன கழிவு நீர் அகற்றும் வாகனங்கள் வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர்





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்களை அன்று துவக்கி வைத்ததைத் தொடர்ந்து தென்காசி இ. சி.ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா வாசுதேவ நல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.சதன் திருமலைக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

தென்காசி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் 08 பயனாளிகளுக்கு ரூ.53,520/ மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்களும், 02 பயனாளிகளுக்கு ரூ.14,560/ மதிப்பிலான இலவச தேய்ப்பு பெட்டிகளும், 300 பயனாளிகளுக்கு ரூ.4.05 கோடி மதிப்பிலான பட்டாக்களுக்கான ஆணையினையும், 15 பழங்குடியின மக்களுக்கு இலவச வீடுகளுக்கான வைப்புத் தொகைக்கான ரசீது களும், மாவட்ட தொழில் மையம் மூலம் 19 பயனாளிகளுக்கு அண்ணல் அம்பேத்கார் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்குவதற்கு ரூ.133.45 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் 02 பயனாளிகளுக்கு வேளாண் வளர்ச்சித்திட்டம் நிரந்தரப் பந்தல் அமைக்கும் பணிக்காக ரூ.2,37,500/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், வேளாண் துறையின் மூலம் 05 பயனாளிகளுக்கு ரூ.12,500/ மதிப்பிலான மின்கலத் தெளிப்பான்களும், வேளாண் பொறியியல் துறை மூலம் 08 பயனாளிகளுக்கு ரூ.64 இலட்சம் மதிப்பில் இலவச ஆழ்துணைக்கிணறு அமைத்து மின்மோட்டார் அமைப்பதற்கான சாவியும், தாட்கோ மூலம் 03 பயனாளிகளுக்கு புதிய தொழில் தொடங்குவதற்கு ரூ.15,76,000/ மதிப்பிலான கடனுதவிகளும், 06 பயனாளிகளுக்கு தூய்மைப் பணியாளர் நல வாரிய உதவித் தொகையும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் 18 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் ரூ.4,50,000/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் மூலம் 05 பயனாளிகளுக்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பிலான திருமண உதவித்தொகையும், மாநில ஊரக மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 2415 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10,01,22,000/ மதிப்பிலான கடனுதவித் தொகையும், கால்நடை பராமரிப்புத் துறை மூலம் பழத்தோட்டங்களில் ஊடு பயிராக பசுந்தீவனத்தை ஊக்குவித்தல் திட்டத்தின் மூலம் 54 பயனாளிகளுக்கு ரூ.1,23,000/ மதிப்பிலான கடனுதவிகளும், 01 பயனாளிக்கு நாட்டுக்கோழி பண்ணை அலகு மானியம் ரூ.1,56,875/ மதிப்பிலான கடனுதவிகளும், ஆதரவற்ற விதவைகள், ஆதரவற்றோருக்கு 50 சதவீதம் மானியத்தில் ஆதரவற்ற குஞ்சுகள் விநியோகத் திட்டத்தின் கீழ் 356 பயனாளிகளுக்கு ரூ.6,69,600/ மதிப்பிலான கடனுதவிகளும், 17 பயனாளிகளுக்கு பாசனப் பகுதிகளில் பசுந்தீவனம் உற்பத்திக்கு ரூ49.500/ மதிப்பிலான கடனுதவிகளும், மானாவாரி தீவன உற்பத்தியை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் 47 பயனாளிகளுக்கு ரூ.69,000/ மதிப்பிலான கடனுதவிகளும், இயந்திர புல்வெளி வெட்டிகள் விநியோகத்தின் கீழ் 09 பயனாளிகளுக்கு ரூ.1,44,000/ மதிப்பிலான கடனுதவிகளும் என மொத்தம் 3280 பயனாளிகளுக்கு ரூ.15,78 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், தென்காசி நகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கப் பட்டுள்ளது.









தூய்மைப் பணியாளர்கள் தெரிவித்ததாவது,

நாங்கள் தென்காசி நகராட்சியில் தூய்மைப் பணியாளர்களாக பணிபுரிந்து வருகிறோம். இவ்விழாவில் எங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க பணிபுரியும் போது பாதுகாப்பாக பணிபுரிவதற்காக பாதுகாப்பு உபகரணங்களை வழங்கினார்கள். இதனால் நாங்கள் வேலை செய்யும் போது பாதுகாப்பாக பணிபுரிய முடியும். இவ்வாய்ப்பினை எங்களுக்கு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு எங்க ளுடைய நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்

வெளியீடு:

செய்தி மக்கள்
தொடர்பு அலுவலர்
**இரா.சண்முகசுந்தரம்.**
உதவி மக்கள் தொடர்பு
அலுவலர்(செய்தி)
ரா.ராமசுப்பிரமணியன்
தென்காசி மாவட்டம்.

# சிவகங்கை மாவட்ட ஆட்சியர் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



சிவகங்கை, டிச.28

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர், விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி வேளாண் பெருங்குடி மக்களின் நலன் காத்து வருகிறார்கள். அதன்படி, விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடும் பொருட்டும், வேளாண் தொழிலை உழவர்கள் எவ்வித இடையூறு இன்றியும் தேவையான அனைத்து வசதிகளுடன் மேற்கொள்ளும் பொருட்டும், பிரதி மாதந்தோறும் விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாதத்தில் கடைசி வெள்ளிக்கிழமை அன்று நடத்தப்பட்டு வருகிறது. அதனை, மேலும் விரிவுபடுத்திடும் பொருட்டு, விவசாயிகளுக்கு

கோரிக்கைகளின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், புதிய கோரிக்கைகள் தொடர்பாகவும் எடுத்துரைக்கப்படுகிறது.

குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்தில் தேவையான நிலங்களில் தடுப்பணைகள் ஏற்படுத்தி, நிலத்தடி நீர் மட்டத்தினை பாதுகாத்திடவும், நீர் நிலையிலுள்ள ஆக்கிரமிப்புக்களை உடனடியாக அகற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், விவசாய நிலங்களை வன விலங்குகள் சேதப்படுத்தாமல் பாதுகாத்திடவும், விவசாயிகளின் கோரிக்கைகளுக்கிணங்க,

யான உரங்களை இருப்பு வைத்திடவும், வங்கிகளின் மூலம் கடனுதவிகள் வழங்கி வேளாண் சார்ந்த புதிய தொழில் தொடங்கிட உறுதுணையாக இருந்திடவும், கடனுதவிக்குரிய மானியத் தொகையினை தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்கிடவும், குறிப்பாக இக்கூட்டத்தின் வாயிலாக விவசாயிகள் தெரிவிக்கப் பட்டுள்ள பல்வேறு கோரிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி, அரசின் திட்டங்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா

களின் ஆய்வுகளும் மேற்கொண்டு, அந்நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கும்படியும் மாவட்ட ஆட்சித் தலைவர் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், இணை இயக்குநர் (வேளாண்மை) சுந்தரமகாலிங்கம் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.






மதுரை மாவட்டத்தில் அவனியாபுரம் பாலமேடு அலங்காநல்லூர் ஆகிய இடங்களில் நடைபெறவிருக்கும் ஜல்லிக்கட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து பத்திரபதிவு மற்றும் வணிகவரி துறை அமைச்சர் மூர்த்தி தலைமையில் அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் விழா குழுவினருடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது மாவட்ட ஆட்சித் தலைவர் மா. சௌ. சங்கீதா,மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன், மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ் குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிகே அரவிந்த், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் ஆகியோர் உடன் உள்ளனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161